சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணிநியமனம் -காலஞ்சென்ற திரு கே.சண்முகம் என்பவரின் மகள் செல்வி எஸ்.தேன்மொழி, தட்டச்சர் பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள்நல்வாழ்வு (மற்றும்) குடும்பநலத் (எபி2) துறை

அரசாணை(2பத்தாண்டு) எண்.88

நாள்: 18.09.2015.
திருவள்ளுவர் ஆண்டு 2046
மன்மத, புரட்டாசி –01

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண் 560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 3.8.1977.
2. மருத்துவக் கல்வி இயக்குநரின் கடித எண். 47447/நி2/4/2012, நாள் 22.08.2013, 10.07.2014 மற்றும் 16.04.2015.
3. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடித எண்.6962/சிடி–அ2/2014, நாள் 16.10.2014 மற்றும் 11.08.2015.

-----

ஆணை :-

பார்வையில் காணும் கடிதத்தில், மருத்துவக் கல்வி இயக்குநர், நோய்தடுப்பு கிங் மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிண்டி, சென்னையில் ஆய்வுக்கூட நுட்பனராக பணியாற்றிக் கொண்டிருந்த போது திரு கே.சண்முகம் என்பவர் 02.04.2000 அன்று இறந்துவிட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 12.12.1942 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.12.2000 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மகள் செல்வி எஸ்.தேன்மொழி என்பவர் தனக்குக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பணிவேண்டி விண்ணப்பித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 07.06.1971 என்றும் செல்வி எஸ்.தேன்மொழி பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதால், தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி, தனியர் செல்வி எஸ்.தேன்மொழி என்பவர் கருணையடிப்படையில் தமிழ்நாடு அமைச்சப்பணியில் நோய் தடுப்பு கிங் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அவர் தட்டச்சராக 03.05.2010 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியரை தட்டச்சர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 03.05.2010 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் 1954 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில் ஒழுங்குமுறை 16(பி) பிற்பகுதியின்படி, சென்னை கிண்டில் உள்ள நோய் தடுப்பு கிங் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வுகூட நுட்பனராகப் பணிபுரியும்போது 02.04.2000 அன்று காலமான திரு கே.சண்முகம் என்பவரின் மகள் செல்வி எஸ்.தேன்மொழி என்பவரைக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் 03.05.2010